மெய்யியல் நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள்

முனைவர் பட்ட ஆய்விற்குரிய (**Ph.D**) முன் ஆய்வுச் சுருக்கம்
ஒப்படைப்பு

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

செல்வி ர.ஆர்த்தி

பதிவு எண் : 20PHTMF006

ஆய்வு நெறியாளர்

முனைவர் ச.பிரியதர்சினி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641 043.

மார்ச் - 2024

மெய்யியல் நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள்

முன்னுரை

நாம் ஏதோ ஒரு வகையில் உலகியல் சார்ந்த செய்திகளைப் பற்றி சிந்திக்கவும் ஆராயவும் முற்பட்டு தத்துவம் பேசுகின்றோம். தத்துவம் என்ற சொல் மெய்யியல், மெய்ப்பொருளியல் என பெயர்களினால் அழைக்கப்படுகின்றது. மனிதர்கள் எதற்காக வாழ்கின்றார்கள் என்பது பற்றியும், அவர் தம் வாழ்க்கையின் நோக்கங்கள் எவை என்பது உணர்வதற்கு குறித்தும் அறிவு தேவையானதாக உள்ளது. இவ் அறிவினை மெய்யியலே நமக்களிக்கிறது. அதாவது, நமது வாழ்க்கை பற்றியும், வாழும் உலகம் பற்றியும் கொண்டுள்ள மனப்பான்மைகளை பிரச்சினைகளைப் பரந்த நோக்குடன் ஆராய உதவுகிறது. மெய்யியல் இருப்பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை கீழை மெய்யியல்(கருத்து முதல்வாதம்), மேலை மெய்யியல்(பொருள் முதல்வாதம்). மேலை, கீழைநாடுகளில் வேறொரு கொள்கைகள் இருந்தாலும் புலன் கடந்த பொருளியல், சமூகம், அழகியல் போன்றவற்றில் பார்வை ஒரே கண்ணோட்டமாக உள்ளது. இதன் அடிப்படையில் கவிஞர் ஞானக்கூத்தன் கவிதைகளில் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வுத் தலைப்பு

ஆய்வின் தலைப்பானது, **மெய்யியல் நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள்** என்பது ஆகும்.

ஆய்வின் நோக்கம்

கவிஞர் ஞானக்கூத்தன் கவிதைகளை மேலோட்டமாகப் பார்ப்பதற்கு எளிமையானத் தோற்றம் கொண்டாலும் மிகவும் ஆழமான கருத்துக்களை கொண்டவையாக அமைந்துள்ளது. தத்துவம் என்று சொல்லப்படும் விஷயம் அவரது கவிதையில் புதிய உருவத்தை பெற்றுள்ளது. இதுவரை தமிழ்க்கவிதை கண்டிராத தத்துவ பரிமாணமும், சமூக நலத்தையும், அழகியல் ரீதியான கவிதானுபங்களை அவர் கவிதைகளின் காண முடிகிறது. அவ்வகையில், இம்மூன்றையும் சரியான முறையில் மக்களுக்கு புரிய வைத்தும், கவிதையின் மீது ஆர்வத்தினைத் தூண்டுவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் கருதுகோள்

இருண்மை கவிஞர் என பலரினாலும் போற்றப்படக்கூடியவர் கவிஞர் ஞானக்கூத்தன் அவர்கள். மெய்யியல் என்பது உண்மைப்பொருளாகும். இது கருத்துமுதல்வாதம்(கீழைமெய்யியல்), பொருள் முதல்வாதம்(மேலை மெய்யியல்) என பிரிக்கப்படுகிறது. இவ்விரண்டும் கவிஞர் ஞானக்கூத்தன் கவிதைகளில் வெளிப்பட்டு உள்ளதா எனக் காண்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

கவிஞர் ஞானக்கூத்தன் எழுதிய **ஞானக்கூத்தன் கவிதைகள்** என்ற முழுத் தொகுப்பும் ஆய்வு எல்லையாக அமைகின்றன.

ஆய்வு ஆதாரங்கள்

கவிஞர் ஞானக்கூத்தனின் ஞானக்கூத்தன் கவிதைகள் முழுவதும் ஆய்வின் முதன்மைச் சான்றாதாரமாக அமைகின்றது. மெய்யியல், மெய்யில் ஒரு அறிமுகம் போன்ற நூல்கள், தத்துவம் சார்ந்த நூல்கள், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள், அகராதிகள், நிகண்டுகள், களஞ்சியங்கள், இணையதளங்கள் முதலானவை துணைமைச் சான்றாதாரங்கள் ஆகும்.

ஆய்வு அணுகுமுறை

ஞானக்கூத்தன் கவிதைகளை தொகுத்தும், பகுத்தும் விளக்குமிடத்து பகுப்பாய்வு மற்றும் விளக்கமுறை அணுகுமுறையும், தத்துவங்களை ஆராயுமிடத்து தத்துவவியல் அணுகுமுறையும், சமூகக்கருத்தை கூறுமிடத்து சமூகவியல் அணுமுறையும், அழகியல் அனுபங்களை ஆராயுமிடத்து அழகியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டள்ளன.

ஆய்வு முன்னோடிகள்(நூல்கள் /ஆய்வேடுகள்)

வ.எ	ஆய்வுத்தலைப்பு/நூல்கள்	ஆய்வாளர் /ஆசிரியர்	நெறியாளர்	பல்கலைக்கழகம் / பதிப்பகம்	ஆண்டு /பதிப்பு
1.	கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருள் வரலாறு	சர்வபள்ளி இராதகிருஷ்ணன்	-	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	1970
2.	மெய்யியல் ஒரு அறிமுகம்	கனகசபை சிவானந்தமூர்த்தி	-	யாழ்ப்பாணப் பல்கலைகழகம்	1998
3.	**ஞானக்கூத்தன் கவிதைகள் - வடிவவியல் நோக்கு**	**க.பாக்கியலெட்சுமி**	**முனைவர். க.பூரணச்சந்திரம்**	**திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைகழகம்**	**2002**
4.	மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்	கலாநிதி.பீ.எம்.ஜமாஹிர்	-	நதா வெளியிடு, கண்டி	2010
5.	சங்கஇலக்கிய மெய்யியல்	கோவைவாணன்	-	நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்.	2013
6.	மெய்யியல் பிரச்சினைகள்	கலாநிதி.க.கணேராசா	-	இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழகம்	2016

ஆய்வுப் பகுப்பு முறை

மெய்யியல் நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள் என்னும் இவ்வாய்வானது முன்னுரை முடிவுரை நீங்கலாக, நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

இயல் -1 மெய்யியல் ஓர் அறிமுகம்

முன்னுரை

உலகத்தில் மாற்றம் ஒன்றே நிலையானது. எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டது. மெய்யியல் அமைப்புகளும் மாறக்கூடியவையே. அதாவது மெய்யியல் காலத்திற்கேற்ப மாறும் தன்மை கொண்டது. எல்லா இலக்கியங்களுக்கும் இது பொருந்தும். மெய்யியல் வெறும் கோட்பாடு என்ற சிந்தனையை உடைத்து, இயற்கை, சமுதாயம், மனம் ஆகியவற்றின் மீது ஆட்சிசெய்யும் பொதுவான விதிகளைக் குறித்த அறிவே ஆகும். இவ்வாறு மெய்யியலின் தோற்றம் வளர்ச்சி, அமைப்பு, துறைகள், மெய்யியல் உட்கூறுகள் முதலியவற்றை எடுத்துரைப்பதாக இவ்வியல் அமைகிறது.

மெய்யியல் சொற்பொருள்

பழங்காலத்தில் **மெய்** என்பதற்கு **உட்பொருள்** என்று அர்த்தம். உட்பொருள் என்பது **உண்மைப்பொருள்** எனப்பொருள் தருகிறது. இந்த அடிப்படையில் **தத்துவம்** என்ற வடமொழிச்சொல் தமிழர்களிடையே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்போது இதை விடுத்துத் தமிழ்ச்சொல்லான **மெய்ப்பொருளியல்** அல்லது **மெய்யியல்** என்ற சொல் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, மெய்யியல் சிந்தனை உண்மையைத் தேடுவதும் அறிவதும் பற்றிய அறிவுத்துறை எனக் கூறலாம். எந்தப்பொருளானாலும், அது எப்படிக்காட்சியளித்தாலும், அப்பொருளின் வெளித்தோற்றத்தைக் காணாமல், உள்ளடக்கமாகிய உண்மைப்பொருளைக் காண்பதே **மெய்யுணர்வு.** இவ்வாறு உண்மையைக் கண்டறியும் அறிவுப்பூர்வமான மெய்யியலைக் குறித்து, திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள்-355)

என்று கூறுவதும் அறியத்தக்கது. மெய்யுணர்வு என்பதனை மெய்யறிவு – உண்மையறிவு எனலாம். அதனை திருவள்ளுவர் குறிப்பிடுகையில் பகுத்தறிவே மெய்யுணர்வாகும் என்கிறார். இவர் கூறும் மெய்யறிவு கடவுள் பற்றிய அறிவு அன்று. மாறாக, உள்ளதை உணர்வது, பொருட்களின் மெய்மையைக் காண்பது, சிறப்புத் தருகின்ற செம்மைப் பொருளைக் காண்பது, மயக்கம் நீங்கிய குற்றமற்ற பகுத்தறிவைப் பெறுவது ஆகும்.

வாழ்வின் அர்த்தம் தேடும் பயணம் தான் **மெய்யியல்**. வாழ்வின் அர்த்தத்தை தேடித் தொகுப்பதுதான் மெய்யியலின் மையம் எனக் கருதப்படுகிறது. இவ்வாறு தேடியதும், அதன் முடிவுகளுமே மெய்ப்பொருளியில் ஆகும்.

ஒவ்வொருவரும் நான் யார் என்ற கேள்வி எழுப்பி அதற்கு விடை காண முயல வேண்டும். இது படிப்பதற்கும், கேட்பதற்கும் எளிமையாக தெரியும். முயன்று பார்த்தால் இந்த வினாவிற்கான

விடையின் மகிமை தெரியும். அதனால்தான் மெய்யியலாளர் அரிஸ்டாட்டில் 'உண்மையை அறிய முயலும் விஞ்ஞானமே மெய்யியல்'**(கலாநிதி,ஜமாஹிர்.மெய்யியல் பிரச்சினைகளும்,பிரயோகங்களும் ப.05)** என்று கூறுகிறார். அதாவது, வாழ்க்கை தன்மையையும், இருப்பின் இயல்பையும் ஆராய்வது மெய்ப்பொருள் இயல் ஆகும்.

மெய்யியலில் வரலாறு

மனிதன், என்று சிந்திக்கத் தொடங்கினானோ அன்றே மெய்யியல் தொடங்கி விட்டது எனலாம். **மெய்ப்பொருளியல் கருத்துக்கள் கிரேக்க நாட்டில் தோன்றுவதற்கு முன்பே, இந்தியநாட்டில் தோன்றின. கௌதம புத்தர் காலத்திற்கு முன்பே உபநிடதங்களில் மெய்ப்பொருளியல் மிகவும் விரிவடைந்திருந்தன என்பதை அறியமுடிகிறது. கிரேக்க நாட்டில் கி.மு.ஆறாம் நூற்றாண்டிலிருந்தே மெய்யியற்சிந்தனை தோற்றம் பெறுகிறது. ஆனால் இந்தியாவிலோ அச்சமயத்தில் மெய்ப்பொருளியல் மிகவும் வளர்ச்சியடைந்து இருந்ததாக மெய்ப்பொருளியல் வரலாறு கூறுகிறது என ம.மதுசூதனன் குறிப்பிட்டுள்ளார்.(ம.மதுசூதனன். தமிழ்ப்புதுக்கவிதைகளும் மெய்யிற்சிந்தனைகளும். ப.02)** கடவுள், உயிர், உலகு, மனித வாழ்வு முதலியவற்றில் மெய்ப்பொருள் இயலைப் பற்றியும், தத்துவக் கருத்துக்களைப் பற்றியும் ஆராயாத நாடுகள் உலகில் இல்லை. இந்திய நாட்டிலும் இவ்வராய்ச்சியும் அதன்முடிவும் உச்சநிலையை மிகப்பழங்காலத்திலேயே அடைந்திருந்தன என்பது உலகப் பேரறிஞர்களின் கருத்து. உபநிடதங்களை மிகப் பழமையானவை இவை கி.மு.8 நுற்றாண்டில் தொகுக்கப்பட்டவை.

மெய்யியல் தனது வளர்ச்சிப் படியில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு வகையான வினைப்பொருள் பற்றிய தேடலாக இருந்து வந்துள்ளது. உதாரணமாக, ஆரம்பகால மெய்யியல் பிரபஞ்சவியல் பற்றியும், இடைக்கால மெய்யியல் சமய உள்பொருள் பற்றியும், மறுமலர்ச்சிக் கால மெய்யியல் விஞ்ஞானம் பற்றியும், தற்கால மெய்யியல் மொழிபற்றியும் அதிகம் கவனம் செலுத்துகிறது. ஆதிகிரேக்க மெய்யியலானது, கிரேக்க மெய்யியலுக்கு அடுத்து வருகிற காலப்பகுதி, இடைக்கால மெய்யியல் பகுதி என வகுக்கப்பட்டுள்ளது.

மெய்யியலின் பிரதான கூறுகள்

மெய்யியலானது வரலாற்றின் ஆரம்ப காலத்தில் பல பிரிவுகளாக வளர்ச்சியடையவில்லை. பிற்பட்ட காலத்திலேயே இது வளர்ச்சியடைந்துள்ளது. மேலை, கீழை நாடுகளில் மெய்யியல் வெவ்வேறு கொள்கைகள் கொண்டிருந்தப் போதும் புலன் கடந்த பொருளியல், அழகியல், அறவியல்(ஒழுக்கவியல்) போன்ற மூன்று உட்கூறுகளும் ஒரே வளர்ச்சி பயணத்தைக் கொண்டது. மேலை கீழை நாடுகளில் இம்மூன்றை வெவ்வேறு பார்வையில் மெய்யியலாளர்கள் பார்க்க தொடங்கினாலும் இறுதியில் இரண்டு கருத்துகளும் ஒரே சார அம்சமாக கொண்டதாகவே உள்ளது அறிஞர் கண்டறிந்துள்ளனர்.

ஞானக்கூத்தன் கவிதைகளில் வெளிப்படும் தத்துவம், சமூகக் கருத்து, அழகியல் மூன்றையும் மெய்யியல் நோக்கில் அணுகுவதாக பின்வரும் இயல்கள் அமைகிறது.

இயல் - ஞானக்கூத்தன் கவிதைகளில் புலன் கடந்த பொருளியல்

முன்னுரை

மனிதன் தன்னைச் சுற்றி நிகழும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் காரண காரியங்களை அறிய விழைகின்றான். அம்முயற்சியின் பொழுது தன் அறிவுக்கும் புலனுக்கும் எட்டாத பலவற்றிற்க்கும் காரணங்களை கூறி விளக்க முற்படுகின்றான். தன்னைச் சுற்றி நிகழும் புதிர்களுக்கு கண்டறிந்து சொல்லும் பதில்கள் முழு உண்மையானவை என்று சொல்வதற்கில்லை. ஆனால், உண்மையோடு ஏதோவது ஓர் அளவில் தொடர்புடையதாக இருக்கும். வாழ்வில் மனிதன் எழுப்பிக் கொண்ட வினாக்களுக்கு அவன் கண்டறிந்தத்தாக வெளிப்படுத்தும் விடைகளின் மீது வினாத்தொடுப்பது மெய்யியலின் பணி ஆகும். எனவே கடவுள், மறுபிறவிக்கோட்பாடு, ஊழ்வினை முதலியவை பற்றிய சிந்தனைகள் தொடர்ந்து கேள்விகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இவைப்பற்றி கவிஞர் ஞானக்கூத்தன் கவிதையில் எவ்வாறு வெளிப்பட்டுள்ள விதத்தே காண்பேதே இவ்வியலாக அமைகிறது.

புலன் கடந்த பொருளியல்

மனிதன் எப்படி தோன்றியனான்? பிரபஞ்சம் எவ்வாறு உருவானது? அனைத்தையும் படைத்தவன் யார்? அதற்கான காரணம் என்ன? அதன் நோக்கம் என்னவாக இருக்க கூடும்? என்ற பல கேள்விக்கு விடை தேடுவதே புலன் கடந்த பொருளியல் ஆகும். அதாவது பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்ட சக்தியே பற்றிய ஆராய்வதே ஆகும்.

இதனை மேலைநாடு புலன் கடந்த பொருளியல் என்றும், கீழைநாடு தத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. மெய்யியலின் இந்தப்பகுதி மிக கடினமாகவும், புதிரான பகுதியாகவும் இருந்தாலும் இதுவே மெய்யியலின் அடிவேராக உள்ளது. மேலைநாடு மெய்யியல் அறிவியல் சார்ந்த தேடலாகவும், கீழைநாடு மெய்யியல் ஆன்மீகம் சார்ந்த தேடலாகவும் அமைகிறது. ஆனால் இவ்விரண்டும் உண்மைப் பொருளை காண்பதே நோக்கமாக கொண்டுள்ளது.

அதாவது, அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. பொருளின் உண்மையைப் புரிந்து கொள்ள முயல்கிறது அறிவியல். உண்மையின் பொருளை உணர முனைகிறது ஆன்மிகம். இவ்வியலின் கருப்பொருளாக, உயிர், உயிரின் தொடக்கம்- முடிவு, மறு உலகம் மறுபிறவி, கடவுள், வீடுபேறு, விதி போன்ற கருத்துக்கள் திகழ்கின்றன.

சமய அடிப்படையில் தத்துவம்

- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **ஆசையே** என்கிறது **சமணமும் பௌத்தமும்**

- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **மல பந்தமே (ஆவணம், கன்மம், மாயை)** என்கிறது **சைவம்**
- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **பாசப் பற்றே** என்கிறது **வைணவம்**
- உயிர்கள் மீண்டும் பிறக்கக் காரணம் **பாவமே** என்கிறது **கிறித்துவமும் இசுலாமியமும்**

இவ்வாறு ஒவ்வொரு சமயங்களும் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருந்தாலும் இறுதியாக பார்க்கையில் மேலை, கீழை நாடுகளில் **கடவுள், ஊழ்வினை(கன்மம்), மறுபிறவிக்கோட்பாடு** பற்றி நம்பிக்கை உள்ளதே அறிய முடிகிறது.

கடவுள்

கடவுள் என்ற சொல்லுக்கு உள்ளத்தைச் செலுத்துகின்ற ஆற்றல், அல்லது உள்ளத்தைக் கடந்தது என்று பொருள். உடல் - செயல் - மனம் - அறிவு – கரு – மாயை - ஆற்றல் என்னும் உணர்வுக் கட்டுக்களைக் கடந்த பின்னரே கடவுள் நிலையை அணுக முடியும். இக்கட்டுக்களைத் தமிழ்ச் சைவசிந்தாந்தம் ஆணவம், கன்மம், மாயை என மும்மலமாகக் கூறும். இவ்வகைக் கட்டுக்களை அறுத்து எறியும் நெறிகளை அறிவுறுத்துவதே உண்மைச் சமயம். இவற்றை உடைத்து எறியும் விடைகளை விளக்குவதே கடவுள் நெறி.

இறைவனை அறியாதவர்கள்

பூலோகத்தையும், இங்கு இருக்கும் அனைத்தையும் படைத்தார் கடவுள் என்பது நம் முன்னோரின் நம்பிக்கை. இதைப்பற்றி பல விவாதங்கள் நடத்து இருந்த போது கூட மனிதனை காட்டிலும் ஒரு பேராற்றல் இருப்பதை மட்டும் அறிஞர்கள் நம்பிகின்றார்கள்.

ஒன்றும் அறியாமல் ஒன்றும் உணராமல்
ஒன்றாய் இருப்பதும்
ஏதுக்கடி குதம்பாய்- அவா்
ஒன்றாய் இருப்பதும்
ஏதுக்கடி (ஞா.க.ப.210)

என்னும் கவிதையில், உடலும் உயிரும் ஒன்றாக இருந்தாலும், இதை படைத்த இறைவனை மறந்து வாழ்வும் வாழ்க்கை ஏதுக்கடி என்று மனிதர்கள் வாழுகின்றார்கள், மேலும் சிற்றின்பத்தை நாடி பேரின்பமான இறைவனை அடையும் வழி மறந்து வாழ்வது ஏதுக்கடி, என மனிதரின் வாழ்க்கையை கேள்விக் கேட்டு, பின் அதற்கு பதில் சொல்லுகிறார். அதாவது, சிற்றின்பத்தை இதைவிடுத்து இறைவனை நினைத்து அவரை மனத்தால் துதித்து வாழ்வது வாழ்க்கை என வலியுறுத்துகிறார் கவிஞா். இந்த கருத்தினை பட்டினத்தார் அவர்கள்,

கருவாய் உருவாய்க் கலந்துஉல குஎலாம் நீயாய்
அருவாகி நின்றது அறிகிலேன் பூரணமே[42]

கருவில் இருந்த காலத்தும், உரு எடுத்துப் பிறந்த வாழும் காலத்தும், என எல்லாக் காலங்களிலும், இரண்டறக் கலந்து, உருவமற்று நின்றவன் நீயே என்பதை அறியாமல் இருந்து விட்டேன் என தனது பாடலில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஊழ்க்கோட்பாடு

கருமம் என்பதே கன்மம் என அழைக்கப்படுகிறது. கருமம் என்பதற்கு வினை(செயல்) என பொருள்படும். இதனை ஊழ் என்ற சொற்களினாலும் அறியலாம். எல்லா செயல்களுமே வினையினால் நடக்கிறது. செயல்கள் மட்டுமின்றி நம்முடைய எண்ணங்களும், சொற்களும், செயலும் கூட கன்மத்தினுள் அடங்கும்.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கு துய்த்தல் அரிது[47]

என்ற குறளில் கோடிப்பொருள் சேர்ந்திருந்தாலும், இறைவன் விதித்த விதிப்படிதான் நாம் அதை அனுபவிக்க முடியுமே தவிர, நம் விருப்பப்படி அனுபவிப்பது கடினமாகும். எல்லா உயிர்களும் இன்பத்தை அனுபவிக்க விரும்பினாலும் துன்பங்கள் தவிர்க்கமுடியாதது ஆகும். இவற்றிற்கெல்லாம் காரணம் நம் வினைப்பயன் ஆகும்.

பிறப்பு

கா்மம் அல்லது வினைப்பயன் என்பது ஒருவரின் தற்போதைய மற்றும் முந்தைய ஜென்மத்தில் செய்த செயல்களில் பயனாகும். கா்மா என்பது ஒருவருக்கு விதிக்கப்பட்ட தலைவிதி அல்ல. அது அவரவா் செய்த வினைப்பயன் அல்லது கா்மவினை ஆகும்.

பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை அனைத்தும் அனைத்து நினைக்கொன்றன
தின்றனை அனைத்தும் அனைத்து நினைத் தின்றனை
பெற்றனை அனைத்தும் அனைத்து நினைப் பெற்றன[50]

எனும் பட்டினத்தார் பாடலடிகள் மூலம் தீவினைகள் செய்தவா்கள், மறுபிறவியில் கீழ் உலகத்தில் பிறந்து செய்த கா்மவினைக்கு ஏற்ப பலன்களை அடையவா்கள் என்பதை அறியலாம். இதைப்போல புதுக்கவிதை வடிவில் கவிஞா் ஞானக்கூத்தன் அவா்கள்,

நாங்கள் நாலுபோ் எலிகளைத் தின்றோம்
ஒரு காலத்தில்
நாங்கள் எலிகளாய்ப் போகலாமென்று
எலிகளாய்ப் போனப்பின் நெல்களைத் தின்கிறோம்
ஒரு காலத்தில்
நாங்களே நெல்களாய்ப் போகலாமென்று
நெல்களாய் நாங்கள் ஆனதன் பின்பு
நாங்கள் நாலுபோ் மண்ணைத் தின்கிறோம்
ஒரு காலத்தில்
நாங்களே மண்ணாய்ப் போகலாமென்று (ஞா.க.ப.95)

என்று படைத்திருக்கிறார். அதாவது இக்கவிதையில் யாரோ ஒருவன் சொல்வது போல் புதிரோடு ஆரம்பிக்கின்றார் கவிஞர். எலியாக பிறந்தோம் நெல்லுகளை தின்றோம், நெல்லாக மாறிப்பின்பு மண்ணை தின்றோம், இறுதியாக மண்ணாகவே ஆனோம். வினையின் சுழற்சியில் காரணமாக செய்த செயலுக்கு ஏற்ப வினைப்பயன் பெறும். இது சைவசித்தாந்தம் படி, ஒருவரின் முழு கா்மவினை அல்லது வினைப்பயன் முடியும் வரை பிறவியானது தொடா்ந்து கொண்டே இருக்கும் என்ற கருத்தினை உட்புகுத்தி உள்ளாா் கவிஞா்.

மறுபிறப்புக் கோட்பாடு

உயிா்கள் வினைக்கேற்பப் பிறவிகள் பிறக்கின்றன என்பது பிறவிக் கொள்கையின் அடிப்படையாகும். பிறப்பு, பல என்பதும் உயிா்கள் ஆற்றும் வினைக்கேற்ப மாறிப் பிறக்கின்றன என்பதும் முன்னோரின் கொள்கை எனலாம். முற்பிறப்பில் நல்வினை ஆற்றியோா் இப்பிறப்பில் நன்மையடைதலும் தீவினை ஆற்றியோா் துன்புறுதலும் வினைக்கொள்கையின் அடிப்படைகளாகும். உண்மையில் மனிதனுக்கு மறுபிறப்பு அவசியமா? அது ஏன் ஏற்கப்படுகின்றது? மறுபிறப்பு என்பது என்ன? அதை நாம் எவ்வாறு தடுக்கலாம்? போன்ற விடயங்கள் அனைத்தும் வினையின் அடிப்படைசாா்ந்தவையாகும்

மறுபிறப்பை போக்கக் கூடியவன் மறுபிறப்பை அறவே அறுத்து போக்கக் கூடியவன் இறைவன் ஒருவனே. இறைவனுடைய திருவடியை நினைப்பவா்க்கும், அதனை அடைபவா்க்கும் மறுபிறப்பு இல்லை. அவா்களே பிறவியாகிய பெருங்கடலை நீத்திக்கடவுவாா்.இதனை,

பிறவி பெருங்கடல் நீந்துவாா் நீந்தாா்
இறைவனடி சேரா தாா்[53]

என்று கூறுகிறாா் வள்ளுவா். வள்ளுவா் பாா்வையில் இறைவனுடைய திருப்பாதங்களில் சென்று சோ்வோா்க்கு மறுபிறப்பு மீண்டும் நிகழப் பெறாது என்பதை அறிய முடிகிறது.

பிறப்பு

பேரின்பத்தை அனுபவிக்காமல் இருந்துவிட்டால் என்னவாகும்? பிறப்பு- இறப்பு என்ற வட்டம் தொடரும். இறப்பு பிறப்பு, பிறப்பு இறப்பு இறைவன் உடல் தந்ததன் நோக்கம் நிறைவேறாமல் ஆகிவிடும்போது மறுபடியும் பிறப்பு ஏற்படுகிறது. இதைத்தான்,

நந்தவனத்தில் ஓா் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி[59]

எனும் கடுவெளிச் சித்தரின் பாடல் விளக்குகிறது. இறைவன் அருளால் பத்துமாதம் கருவிலிருந்து உயிரானது உடலைப்பெறுகிறது. இறைவன் உடல் கொடுப்பதன் நோக்கமே,இறைவனை உணா்ந்தது அவனை அடையவேண்டும் என்பதுதான். ஆனால் மக்கள் மாயையில் சிக்கிக் கண்டபடி வாழ்ந்து, உடலை வீணாக்கி, நாட்கள் சென்றபின் இறந்துவிடுகின்றனா். இதைத்தான்

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி என்று சித்தர் கூறுகிறார். இந்த கருத்தைத்தான் கவிஞர் ஞானக்கூத்தன்,

பிறப்புக்கும் வாசனை
உண்டென்பது ஐதீகம்
பிறப்பின் வாசனையை
இறப்பும் அழிப்பதில்லை **(ஞா.க.ப.662)**

எனும் இக்கவிதையில் பதிவுசெய்துள்ளார். பிறக்கும் போதே நமக்கு வாசனை உண்டு என்பது வினைப்பயனை குறிக்கின்றது. அது இறப்புக்குப்பின்பு கூட மறப்பதில்லை. வினைப்பயன் ஏற்ப அடுத்தப்பிறவி ஏற்படும் என்பது சித்தர்களில் நம்பிக்கையாக உள்ளது. அதாவது, நடப்பது அனைத்தும் இறைவனின் ஏற்பாட்டின் படி தான் நடந்துகொண்டு இருக்கிறது என்பதை உணர்ந்தவன். இந்த உலகத்தின் அனைத்து உண்மையையும் புரிந்துக்கொண்டு சுலபமாக வாழ்கின்றான். இதற்கு மாறாக, சிற்றின்பத்தை நாடி பேரின்பத்தை மறந்து வாழ்வார்கள் என்றும் பிறப்பின் வாசனையை அறிய முடியாது என கவிஞர் வலியுறுத்துவதாக உள்ளது.

இவ்வாறு ஞானக்கூத்தன் கவிதைகளில் கடவுள் இருப்பு, வினை, மறுப்பிறவி பற்றி கருத்துகள் அதிகமாக காணப்படுகிறது என்பதை இவ்வியலின் அறிய முடிகிறது.

இயல் -3 ஞானக்கூத்தன் கவிதைகளில் மெய்யியலும் சமூகமும்

முன்னுரை

சமூகத்திற்கும் ஒழுக்கவியலுக்கும் நீண்ட நெடிய தொடர்புக் கொண்டவை. மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு வாழக்கூடாது போன்ற பல விடயங்களையே ஒழுக்கவியல் வெளிப்படுத்துகின்றது. மேலும் செம்மையான வாழ்க்கையினை வாழவும், சீரான முறையில் தமது செயற்பாடுகளை மேற்க்கொள்ளவும் ஒழுக்கவியல் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. இந்த இடத்தில் இருந்தான் மெய்யிலுக்கும் சமூகத்திற்கும் தொடர்பு ஆரம்பிக்கிறது. இதைக் கொண்டு கவிஞர் ஞானக்கூத்தன் கவிதையிலுள்ள சமூகக்கருத்துகள், அரசியல் போன்றவை தொகுத்துக் கூறுவதாக இவ்வியல் அமைய உள்ளது.

மெய்யியலும் சமூகமும்

மனிதன் அடிப்படையில், பிறக்கும்பொழுது விலங்குத் தன்மையோடுதான் பிறக்கின்றான். அவன் வளர்க்கப்படும் பொழுது, பண்பாடு, நாகரிகமும் அவனது மூளையில் சமுதாயத்தால் பதிவு செய்யப்படுகிறது. எனவேதான் மனிதனைச் சமுதாய வளர்ப்புப்பிராணி என்று கூறுகிறோம். குழுக்களாக -கூட்டங்களாக - சமுதாயமாக, என்று மனிதன் கூடி வாழ ஆரம்பித்தானோ அன்று குழுவின் நன்மை கருதியும் தனி மனிதர்களின் நன்மை கருதியும் சில முறைகளை வகுத்துக் கொள்ள ஆரம்பித்தான். அவைதான் பிற்காலத்தில் ஒழுக்கம், கடமை, நெறி எனப்பட்டன. இவைகளின் தொகுப்பே அறம் முதலியனவாகப் பரிமாணம் கொண்டன. அறங்கள் சமுதாய அமைப்புக்கு ஏற்ப மாறினாலும் மனித குல நன்மை கருதி அவ்வச் சமுதாயத்திற்கு ஏற்ற அறங்களைக் காண்பதிலும் வற்புறுத்துவதிலும் மெய்யியலார் குறியாய் இருந்தார்கள். எனவே

அறம் மாறும், இல்லாமல் போகாது. வாழ்வியலுக்குத் தேவையான அறங்கள் பற்றி, மெய்யியலாளரும் கவிஞர்களும் விரிவாகப் பேசி உள்ளனர். அவ்வறங்கள் பற்றிய ஆய்வை அறவியல் எனலாம். அதாவது,

நாம் சாதாரணமாகப் பேசும்போது பயன்படுத்தும் நல்லது கெட்டது, சரியானது பிழையானது. இப்படித்தான் செய்தாக வேண்டும், அவன் அப்படிக் கதைத்திருக்கக் கூடாது. அவளது நடத்தை மோசமானது, அவன் தனது கடமையைத்தான் செய்கின்றான். உண்மையைப் பேசுவது எப்போதும் நல்லது. பிறருக்குத் தீங்கு செய்யக் கூடாது என்ற பேசுவதன் அர்த்தம் என்ன? அத்தகைய உரையாடல்கள் நமக்கிடையே சாதாரணமாக காணப்பட்டாலும். இது தொடர்பாக பல வினாக்கள் நம் மத்தியில் உள்ளது. அதைப் பற்றி மொத்தமாக ஆராயும் மெய்யியல் துறையில் ஒன்றுதான் ஒழுக்கவியல் மெய்யியல் ஆகும்.

சமூக அவலம்

தனிமனித ஒழுக்கமும் பொதுமனித அறமும் முறைப்பிறழாமல் கடைப்பிடித்து வாழ்கிற போதுதான் பாதுக்காப்பான சமூகம் உருப்பெற முடியும். சமூகம் என்பது பொதுநலம் ஆகும். பொதுநலம் பேண வந்தவர்கள் பேணத் தவறிய தன் நலத்தால்தான், இன்னமும் சமூகத்தின் பாதுகாப்பு இல்லாத நிலையில் நாம் வாழ்ந்து இருக்கிறோம். தனிமனித உடைமைகள் பாதுகாப்பு இல்லாத நிலைமை எடுத்துரைக்கும் விதமாக இக்கவிதை அமைகிறது.

திண்ணை இருட்டில் எவரோ கேட்டார்
தலையை எங்கே வைப்பதாம் என்று
எவனோ ஒருவன் சொன்னான்
களவு போகாமல் கையருகே வை (ஞா.க.ப.37)

அதாவது, நாடோடியாக வாழ்ந்து திரியும் மக்கள் பலரும் தங்களது ஓய்வெடுக்கும் இடமாக அக்காலத்தில் திண்ணைகளும், சத்திரங்களும் இருந்தன. அது சமூக மாற்றித்தினால் எப்படி மாற்றப்பட்டுள்ளது என்பதை அங்கதச் சுவையில் பதிவுச் செய்துள்ளார் கவிஞர். திண்ணையின் தங்கிட வந்த ஒருவன் தலையை எங்கே வைப்பது என்று கேட்ட கேள்விக்கு இருட்டின் இருந்த ஒருவர் களவு போகாமல் கை அருகே வை என்ற பதில் தனிமனித உடைமைகள் பாதுகாப்பு இல்லாத நிலைமை மட்டுமின்றி சமூக நெருக்கடிகளையும் மனிதன் எதிர்க்கொள்ளும் சமூக மாற்றத்தையும் எடுத்துரைக்கும் விதமாக கடைசி இருவரிகளில் உள்ளது.

மொழி

தமிழர்கள் என்றுமே தமிழ்மொழியே மதித்து போற்றும் சமூகம் சார்ந்தவர்கள். அவர்கள் தமிழ்மொழிக்கு எந்தொரு இன்னல்கள் வந்தபோதும் அல்லது அதை உருவாக்கிய, அதற்கு காரணமாக இருக்கும் எதையும் விட மாட்டார். கவிஞர் ஞானக்கூத்தன் வாழ்ந்த காலத்தில் வேற்று மொழிகளில் தாக்கத்திலும், பிற மொழி திணிப்பு காரணமாக போரட்டங்களும், சண்டைகளும் நடந்துக் கொண்டிருந்தது. ஆனால், அதைப்பற்றி கவிஞர் பெரிதும் கவலை கொள்ளவில்லை காரணம் அவருக்கும் தமிழ் மீதும் தமிழரின் மீதும் மிகப்பெரிய நம்பிக்கை

இருந்தது. தமிழை என்றும் நம்மைவிட்டு போகாது மற்றும் விட்டு கொடுக்க மாட்டோம் என்று இதை வெளிப்படுத்தும் வகைளில் இக்கவிதை அமைந்துள்ளது.

எனக்கும் தமிழ்தான் மூச்சு
ஆனால்
பிறர்மேல் அதைவிட மாட்டேன் (ஞா.க.ப.96)

அதாவது, தமிழ் என்றும் நமக்கு மூச்சு போன்று அதை பிற மீது திணிப்பது தவறான செயலை சுட்டிக்காட்டும் விதமாக வடிவமைத்துள்ளார் கவிஞர். அவர் காலகட்டத்தில் இந்தி திணிப்பு அதிகமாக காணப்பட்டது அதற்கு பதில் சொல்லும் விதமாகவும், சாட்டை அடி கொடுக்கவும் எழுதியுள்ளார். பிறர்மேல் அதை விட மாட்டேன் என்பது எந்த மொழியாக இருந்தாலும் அதை திணிக்கவோ அல்லது கட்டயாம் படுத்தவோ கூடாது என குறியீடாக பயன்படுத்தியுள்ளார்.
இவ்வாறு ஞானக்கூத்தன் கவிதைகளில் சமூக அக்கறை, அரசியல் நடக்கும் அவலநிலைகளை எடுத்துரைத்தும் அதை மீண்டும் நடக்கமால் இருக்க பல வழிமுறைகளையும் கவிதைகள் வெளிபடுத்தியுள்ளார் அதை தெளிவாக இவ்வியலின் அறிய முடிகிறது.

இயல் -4 ஞானக்கூத்தன் கவிதைகளில் அழகியலும் மெய்யியலும்

மக்களின் பல்வேறு உணர்வு நிலைகளும் செயல்களும் பெருகிய எழுத்துப் பதிப்பே இலக்கியம். உயர்ந்த நாகரித்தையும் பண்பாட்டையும் கொண்ட மக்களின் வாழ்க்கைக் கூறுகள், அவர்கள்பேசும் மொழியின் வாயிலாகக் காலந்தோறும் பல்வேறு இலக்கியங்களாக வெளிப்படுகின்றன. இலக்கியம் உருப்பெற உதவும் உணர்வுகளும் காலத்தோறும் மாறிவருதல் இயல்பே. இவை கால மாற்றத்திற்கேற்ப பல மாற்றங்களும் புதுமைகளும் கண்டுள்ளது. சங்க இலக்கியம் தொடங்கி இப்போது ஹைக்கூ கவிதை வரை மனிதனின் அறிவுத்திறன் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. இதில் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் புதுக்கவிதை தனக்கென்று தனி முத்திரையைப் பதித்துள்ளது. கவிதைகளில் பெரும்பாலும் அழகியல் உணர்வு அதிகமாக காணப்படுகின்றது. அழகு எனும் உணர்வூட்டத்தினால் இவ்வுலகம் தொய்வில்லாது தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது எனலாம். இத்தன்மையான **'அழகியல்'** மெய்யியலுடன் இணைந்து ஞானக்கூத்தன் கவிதைகளில் வெளிப்படும் கருத்துகளை எடுத்துரைப்பதாக இவ்வியல் அமைகிறது.

கவிதையின் அழகியல் பண்பு

கவிதை ரசனை அந்தரங்கமானது. கவிதையானது சொல்லுக்கும் வாசகனின் அகமனதிற்கும் இடையேயான மர்மமான, முடிவற்ற அல்லது பிரிக்க முடியாத உறவின் மூலம் இயங்குவது. கவிதையை ரசிக்கும் ஒவ்வொரு ஆழ்மனமும் தனித்தன்மை உடையது கவிதை. பல வண்ணங்களில் பிரதிபலிக்கும் கண்ணாடி. கவிதைகள் பெரும்பாலும் நாம் உணரும் உணர்வுகளை பிரதிபலிக்கிறது. ஒரு பொருளின் மீதுள்ள **ரசனை**, கவிதையாக உருவம் பெறுகிறது.

அழகியல் என்பதை **ரசனை** என்றும் குறிப்பிடலாம். ஒரு சாதாரண மனிதனுக்குத் திறனாய்வுத் திறன் இல்லாவிட்டாலும், ஒரு படைப்பை ரசிக்கும் திறனாவது இருக்கும். இதுதான் படைப்பாளியையும் வாசகரையும் இணைக்கும் பாலமாக அமைகிறது. அதைத்தான் **அழகியல்** என்று திறனாய்வாளர்கள் பெயரிட்டு அழைக்கின்றனர். கலைப்படைப்பின் அழகினை அனுபவிக்கும் ஒவ்வொரு வாசகருக்குள்ளும் ஏற்படும் மனமகிழ்வு, மன அமைதி, ரசிப்புத் தன்மையே அழகியல். அவரவருக்குத் தனித்தனியான அனுபவங்களும், ரசனைகளும், விருப்புவெறுப்புகளும் உண்டு.

அழகியல், முருகியல் என்று அழைக்கப்படுகிறது. அழகியல் உணர்வு படைப்புகளில் தேவைப்படுகிறது. இதைதான் வாசகர்களும் விரும்புகின்றார்கள். அழகியலானது வருனணைகள், சொல் வளம், பாடுபொருள், உத்திகள் முதலியவற்றால் வெளிப்படுகிறது. வெறும் கருத்து நிறைந்த கவிதையைக் காட்டிலும் சற்று சுவைமிகுந்த சொற்கள் பயன்படுத்தப்படும்போது வாசகரின் மனதை எளிமையாக கவர வைத்து அதன் கருத்தை உணர வைக்க முடியும். எல்லா நேரங்களிலும் அழகியல் உணர்வு தேவைப்படாத போதிலும் சின்னஞ்சிறு மாற்றங்கள் செய்யும்போது தான் கவிதை மேலும் ஒருபடி சிறக்கிறது.

ஞானக்கூத்தனின் அழகியல் பார்வை

நவீனத் தமிழ்க் கவிதை வாசகர்களுக்கு மத்தியில் ஞானக்கூத்தன் என்று சொன்ன உடனே, அவரது பகடி, நகைச்சுவையான கவிதைகளும், கதைச்சொல்லும் கவிதைகளும்தான் நினைவுக்கு வரும். ஆனால் இவரது கவிதைகளில் அழகியல் அம்சம் கொண்ட கவிதைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன என்பது யாரும் அறியாத ஒன்றாகும். இவரின் கவிதைகளில் அழகியல் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைப் பின்வருமாறு காண்போம்.

சுற்றறிக்கை

சுற்றறிக்கை பற்றிய ஞாபகம் அனைவருக்கும் உண்டு. காரணம், பள்ளிப்பருவத்தில் விடுமுறை அறிவிக்கும் புத்தகம், அலுவலகத்தில் பணி உயர்வுக் கொடுக்கும் குறிப்பேடு என வாழ்வில் சுற்றறிக்கையின் பயணம் நெடியது. திரும்பிப் பார்த்தால் அனைத்தும் மகிழ்ச்சியான நினைவுகள். ஆனால் கவிஞர்,

ஒரு சுற்றறிக்கை
கடைசிக் கையெழுத்தைத்
தேடுகிறது. (ஞா.க.ப.775)

என சுற்றறிக்கையின் நிலைமையை விவரிக்கிறார். அதாவது, எப்போதும் கடைசி கையெழுத்தைத் தேடிதான் ஒரு புத்தகம் அல்லது சுற்றறிக்கை அலைத்துத் திரிந்து கொண்டே இருக்கும். அதற்கு கையெழுத்துக் கிடைத்து விட்டால் அது செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று விடும், இல்லை என்றால் இப்படி தான் நிலைமை என்கிறார். ஒரு சுற்றறிக்கை வெறும் கையெழுத்து வாங்கும் புத்தகம் அல்லது ஏடாக நினைப்பவர் மத்தியில் அதற்கு ஓர் உணர்வைக் கொடுத்து, யதார்த்தமான பார்வையில் பார்க்கிறார் கவிஞர்.

கவிஞர்

கவிஞர்களின் மனநிலையை பிரதிபலிக்கும் கவிதைகள் பல உண்டு. அதாவது சோகத்திற்குக் கண்ணதாசன், சிந்தனைக்குப் பட்டுக்கோட்டை, மண்மணத்திற்கு மருதகாசி, பகுத்தறிவுக்கு நாராயண கவி, எழுச்சிக்கு பாரதிதாசன், காதலுக்குக் பாரதி, கண்ணீருக்கு வைரமுத்து, கலகலப்புக்கு வாலி, என்று கவிதையில் தனது முத்திரையைப் பதித்த கவிஞர்கள் ஏராளம். இருந்தாலும் ஒரு கவிஞரின் முதல் கவிதை அவரின் முதல் குழந்தையைப் போன்றது. அப்படிப்பட்ட கவிதைகளை வாசகர்கள் வாசிப்பதில்தான் கவிஞரின் வெற்றி உள்ளது. இதனை, மரணஸ்தர் கவிதையில்,

இருமுறை பிறப்பதாய் சொல்லப்படுகின்ற
அந்தணர் கூட ஒருமுறைதான் இறப்பார்.

அதாவது பூணூல் அணியும்போது அந்தணர்கள் இரண்டாவது முறையாகப் பிறப்பதாக நம்பிக்கை. இருந்தாலும் இறப்பு என்பது ஒரு முறை என்பது நிச்சயிக்கப்பட்டது.

ஆனால் கவிஞனோ பலமுறை இறக்கிறான்.
எல்லோரையும்போல் ஒருமுறை. மற்றவர்
படிக்கப் படிக்கப் பலமுறை பலமுறை. (ஞா.ப.299)

என கவிஞர்களின் மன உணர்வை வெளிப்படுத்துகிறார். அதாவது, கவிஞர்கள் மட்டும் பலமுறை இறக்கின்றனர். காரணம் அவன் படைத்துள்ள படைப்பை ஒவ்வொரு முறையும் வாசகர் படிக்கும் போதெல்லாம் அவனுடைய மனநிலை பலமுறை இறப்பதற்கு சமமாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார் கவிஞர். அதே நேரத்தில் கவிஞர் தன் விடாமுயற்சி பற்றியும் பதிவு செய்துள்ளார்.

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்
உலகத்தீரே! கவிஞர்கள்
எழுதிக் கொண்டிருக்கிறார்கள் (ஞா.ப.499)

என்கிறார். விடாமுயற்சி அனைவருக்கும் வேண்டும். ஒவ்வொரு முறை விழுந்தாலும் எழுந்து நின்று ஓடத் தொடங்க வேண்டும். அதுபோல கவிதை உலகத்தில் புதிய புதிய கவிஞர்கள் பிறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களை இந்த உலகத்தில் உள்ள மக்கள் மறந்து விட வேண்டாம் என்று எச்சரிப்பது போல இக்கவிதையை கவிஞர் படைத்துள்ளார்.

ஆய்வு முடிவுரை

மெய்யியல் என்பது ஒரு பொருளின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் முயற்சியாகும். அதை இரண்டாக பிரிந்துள்ளார்கள் அறிஞர்கள், அவை மேலைநாடு, கீழைநாடு ஆகும். மேலை நாடுகளில் ஆறு வகையான பிரிவுகள் உண்டு. அவை, முறையியல், அறிவாராய்ச்சியியல், அறவியல், அழகியல், புலன் கடந்த பொருளியியல் ஆகும். இதில் இறுதியாக உள்ள அறவியல்(ஒழுக்கவியல், அழகியல், புலன் கடந்த பொருளியியல் கீழை நாடு தத்துவங்களில்

நெருக்கியத் தொடர்புக் கொண்டது. இதன் அடிப்படையில் இம்மூன்றையும் கொண்டு ஞானக்கூத்தன் கவிதைகள் பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு தத்துவவாதிகளும் தங்களுக்குள் பல கருத்துகளால் வேறுபட்டாலும், பிரபஞ்சத்தைப் பற்றிய கண்ணோட்டம், அழகியல், சமூகக்கறை(அறவியல்) போன்றவை அடிப்படையான ஒன்றாகவேத் திகழ்கிறது. மெய்யியல் பற்றிய சிந்தனை வளர்ச்சி பெற்றது கிரேக்கத்தில் என்று பல அறிஞர்கள் சொன்னப்போதும், அதன் அடிப்படை வேராக கீழை நாட்டு தத்துவங்கள் திகழ்கிறது.

ஞானக்கூத்தனின் சிந்தனை மேலைநாடாகவும் இருந்தாலும், அவரின் செயல் கீழைநாடாகவும் பொறுத்தே கவிதைகள் அமைந்திருக்கின்றன. அவர் மேலை,கீழை நாடுகளின் தத்துவங்களை ஒட்டியே கவிதை அமைந்துள்ளது.

மனிதருக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளதை அறிவதே புலன் கடந்த பொருளியியல் ஆகும். மேலை,கீழை நாடுகளில் கடவுள் இருப்பு, வினை, மறுபிறவிக் கோட்பாடுகளில் ஆழமான நம்பிக்கை உண்டு. இதனை அடிப்படையில் ஞானக்கூத்தன் கவிதைகள் அமைந்துள்ளது. இம்மூன்றும் மீதும் கவிஞருக்கு நம்பிக்கை உண்டு என்பதை அறிய முடிகின்றது.

அறம் சார்ந்த செயல்களையும், அதை தவறும் நபர்களில் மீதும் தமிழ் சமூகம் தண்டனைக் கொடுப்பதும், அதை தடுத்து நிறுத்தவதும் முற்பட்டார்கள் நம் முன்னோர்கள். அறத்தை பற்றி ஒழுக்கவியல் தெளிவாக எடுத்துரைக்கிறது. இரு நாடுகளிலும் அறம் என்பது ஒரே கண்ணோட்டம் கொண்டது. ஞானக்கூத்தன் கவிதைகளில் சமூகத்திற்கும் கூறும் அறக்கருத்தையும், தவறுகளைச் சுட்டிக்காட்டும் விதத்தை ஒழுக்கவியல்(அறவியல்) மூலம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

அழகியல் என்பது அழககான அல்லது அசிங்கமான தோற்றம் அளிக்கும் பொருளின் மீது கவிஞர் ஏற்படும் உணர்வை வெளிப்படுத்தும் முறையாகும். இதை பெரும்பாலும் கவிதைகளில் வெளிப்படுத்த சுபலாமான வழியாகும். கவிஞர் ஞானக்கூத்தனும் அதை மாதிரி தனது வாழ்வில் கண்டு உணர்ந்த அனுபவத்தை அழகியல் நோக்கியில் வெளிப்பட்டுள்தை அறியமுடிந்தது.

ஞானக்கூத்தன் கவிதைகள் மேலோட்டமாக பார்க்கையில் அங்கதச்சுவை, இருண்மை மட்டும் நிறைந்து இருப்பதாக தெரிந்தாலும், மெய்யியல் துணையோடு ஆராய்வதில் இவரின் கவிதைகளிலுள்ள தத்துவம், சமூகக்கறை, ரசிப்புத் தன்மைகளை மீது அவரின் ஆழமான கருத்துகளை அறிய முடிகிறது. இவ்வாறு கவிஞர் ஞானக்கூத்தன் கவிதைகளில் கையாளண்டுள்ள விதத்தை மெய்யியல் நோக்கில் தெரிவாக அறியமுடிகிறது.

ஆய்விற்குத் துணை நின்ற நூல்கள், அகராதிகள், ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் முதலானவை துணைநூற்பட்டியலில் இடம்பெறுகின்றன. பின்னிணைப்பில் கவிதைக்கான

வென்படம்(venn patam), தத்துவம், சமூகம், அழகியல் ஆகியவை எவ்வளவு உள்ளது என்கிற புள்ளிவிவரம், ஞானக்கூத்தன் கவிதைகளைப் பற்றி பிற கவிஞர்களின் அனுபவங்கள் மற்றும் கவிதைகளில் பயன்படுத்தியுள்ள தத்துவச்சொற்களுக்கு கலைச் சொற்கள் ஆகியவை இடம்பெறுகின்றன.

பரிந்துரைகள்

1. மார்க்சிய நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள்
2. எடுத்துரைப்பியல் நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள்
3. பட்டினத்தார் பாடல்களும் ஞானக்கூத்தன் கவிதைகளும் - ஓர் ஒப்பீட்டு
4. மேலைநாடு தத்துவ நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள்

ஆய்வுக்கட்டுரைகள்

வ.எ	கட்டுரைத் தலைப்பு	ஆய்விதழ்	ஆண்டு
1.	மார்க்சிய நோக்கில் ஞானக்கூத்தன் கவிதைகள்	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	ஜீன் 2023
2.	ஞானக்கூத்தன் கவிதைகளில் - அங்கதம்	புதிய அவையம்	ஜீன் 2023
3.	ஞானக்கூத்தன் கவிதைகளில் சித்தர் தத்துவப் பதிவுகள்	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	ஜீலை 2023